**OS.55/2021**

**நாள். 17.07.2025.**

**வா.சா.1 –** அப்பாஸ்கான்

<u>5, 6ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் என் அம்மாவுடன் உடன் பிறந்த தங்கை சீனியம்மாள் மற்றும் என் உடன் பிறந்த தங்கை செல்வத்அம்மா ஆகியோர்கள் சார்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 1ம் வாதியின் கணவர் 4ம் பிரதிவாதி சாகுல்ஹமீதுக்கு பவர் கொடுத்ததாக சொல்வதால் வழக்கு. தாவா வழக்கை நடத்த வாதிகள் எனக்கு எப்போது அதிகாரம் கொடுத்தார்கள் என்றால் 2021ம் ஆண்டு. வாதிகள் எனக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம் பதிவு செய்யப்படவில்லை. அட்வகேட் நோட்டரி முன்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த பொது அதிகார ஆவணத்தில் யாராவது சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் இல்லை. வழக்கு பிராதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிராதில் சொல்லியுள்ள விவரங்களைத்தான் என்னுடைய நிரூபணவாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். தாவா வழக்குடன் சம்மந்தப்பட்ட மொத்த சொத்துக்கள் என்றால் 2 ஏக்கர் 70 சென்ட். அந்த 2 ஏக்கர் 70 சென்ட் எந்த சர்வே எண்களில் உள்ளது என்றால் பழைய சர்வே எண்.418/1 புதிய சர்வே எண்.418/1ஏ. மேற்படி சர்வே எண்களுக்கான குறிப்பிட்டு சொல்லக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். புதிய சர்வே எண்.418/1ஏ க்கு சம்மந்தப்பட்ட எந்த ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிராதிலும் மற்றும் நிரூபணவாக்குமூலத்திலும் சொல்லியுள்ள நான்குமால்களுக்குரிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள 4 ஆவணங்களும் தாவா சொத்துக்களுக்கு சம்மந்தப்பட்டவை அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை 2007ம் ஆண்டிலேயே கொடுக்கப்பட்டுள்ளது என்றால்

எனக்கு தெரியாது. அந்த விவரங்கள் எனக்கு பவர் கொடுத்த வாதிகளுக்கு தெரிந்திருக்கும் என்றால் வாய்ப்பு இல்லை. 1ம் வாதியின் கணவருக்குத்தான் தெரிந்திருக்க வாய்ப்புண்டு. வா.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையின் படி இராமநாதபுரம் குற்றப்பிரிவு போலிசார் விசாரித்த விவரம் வாதிகளுக்கு தெரியுமா என்றால் தெரியும். 2007ம் ஆண்டு புகார் கொடுத்தபோது 2002ம் ஆண்டில் 4ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கும், 6 பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்துக்களான 2 ஏக்கர் 70 சென்டில் கீழ்புறம் 45 சென்ட் கிரையம் கொடுத்த விவரம் தெரியும் என்றால் சரிதான். சர்வே எண். 418/1ல் உள்ள 2 ஏக்கர் 70 சென்ட்டில் அமீர்அம்ஷா அபுல்கலாம் என்பவருக்கு எத்தனை சென்ட் கிரையம் கொடுத்தார் என்றால் 2 ஏக்கர் 25 சென்ட். அந்த கிரையம் எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்றால் 1966, தேதி மாதம் தெரியாது. அபுல்கலாம் கிரையம் பெற்ற பிறகு முகம்மது தாவூத் என்பவருக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அபுல்கலாம் கிரையம் பெற்ற 2 ஏக்கர் 25 சென்ட் மொத்த விஸ்தீரணமான 2 ஏக்கர் 70 சென்டில் எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கே உள்ளது. 1966ம் ஆண்டில் அமீர்அம்ஷா அபுல்கலாமுக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தை தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் இவ்வழக்கு தள்ளுபடி ஆகிவிடும் என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அமீர்அம்ஷாவின் வாரிசுகளில் ஒருவரான அமானுல்லா இறந்துவிட்டார் என்பதற்கு இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அமீர்அம்ஷாவின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அமீர்அம்ஷாவின் மற்றொரு வாரிசான சரபுதீன் என்பரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அமீர்அம்ஷாவின் இன்னொரு வாரிசான அயூப்கான் என்பவர் இறந்துவிட்டார் அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் மேற்படி அயூப்கானின் மகனான சீனிஷாவுல்ஹக் என்பவரது இறப்பு

மற்றும் வாரிசு சான்றிதழையோ தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். இறந்துபோன நபர்களுக்கு 4ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரையமும், 6ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரையமும் தெரியும் என்றும், அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் எந்த தாவாவும் செய்யவில்லை என்றும், அவர்கள் இறந்த பிறகு தற்போது சொத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் பொய்யாக இவ்வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. வாதிகளின் அனுபவத்தில் 45 சென்ட் நிலம் இருந்து வருகிறது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.